2022 மே 4] *[திரு. மா. சுப்பிரமணியன்]*

'தெரியாமல் நடந்துவிட்டது, இனி வருங்காலங்களில் இதுபோன்று நடக்க வாய்ப்பில்லை' என்றார். ஆனாலும்கூட, நான் உடனடியாக, 36 அரசுக் கல்லூரி முதல்வர்களையும் இன்று மதியம் 1-00 மணிக்கு அலுவலகத்திற்கு வரச் சொல்லியிருக்கிறேன். ஒரு கூட்டம் நடத்தி, எதிர்காலத்தில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து அறிவுறுத்தப்படவிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த கருணை உள்ளத்தோடு சொன்னார்கள், "இந்த மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் ஏற்கெனவே பேரிடர் காலத்தில் சிறப்பாகப் பணியாற்றினார் என்கின்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது; அவர் வருத்தமும் தெரிவித்திருப்பதால், அவரை மீண்டும் அப்பணியில் நீடிப்பதற்கு உத்தரவிடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அப்பணியில் அவர் நீடிக்கப்படவிருக்கிறார் என்கிற செய்தியைச் சொல்லி, எதிர்காலத்தில் இதுபோன்ற புதிய உறுதிமொழிகளை யாரும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்குத் துறைரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், நவீன படகுகளை இயக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரியில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் நவீன படகுகளை இயக்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையின் மேலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கொரோனா நோய் தாக்கத்தினால் பயணிகள் வருகை மிகவும் குறைந்துவிட்டது. அதனால், எம்.எல். தாமிரபரணி மற்றும் எம்.எல். திருவள்ளுவர் எனப் பெயரிடப்பட்ட இரண்டு படகுகளையும் பயன்படுத்த இயலவில்லை. அந்த இரண்டு படகுகளையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டே வரிகளில் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் வருத்தமானது. கன்னியாகுமரி என்பது பிரசித்திப் பெற்ற இடம். அது ஒரு சுற்றுலா மையம். Poompuhar Shipping Corporation Limited மூலமாக ஏற்கெனவே 3 படகுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த 3 படகுகளிலும் ஒரு நாளைக்கு குறைந்தது 6 ஆயிரத்திலிருந்து 7 ஆயிரம் பேர் பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள் பொறுப்பேற்றவுடனே, சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்றவுடனே, கூடுதலாக இரண்டு படகுகள் வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தோம். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது M.L. தாமிரபரணி, M.L. திருவள்ளுவர் என்ற இரண்டு படகுகளை உடனடியாக sanction செய்து, அவையும் கன்னியாகுமரியில் நின்று கொண்டிருக்கின்றன. கொரோனா பெருந்தொற்று காலத்தினால் அவை செயல்படாமல் இருந்தன. என்னுடைய

கேள்வி எல்லாமே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். Poompuhar Shipping Corporation Limited மூலமாக ஏற்கெனவே 3 படகுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையைப் பார்த்தால், சுற்றுலாத் துறைக்கு நாங்கள் பரிந்துரை செய்கிறோம் என்று கூறுகிறார்கள். என்ன விஷயமென்றால், ஏற்கெனவே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். இன்னொரு கேள்வி இருக்கிறது.

திரு. ந. தளவாய் சுந்தரம்: ஒரே ஒரு நிமிடம். உரையை முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றொரு கேள்வி கேட்பதற்கும் வாய்ப்புத் தருகிறேன்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: சரி ஐயா. 2000 ஆம் ஆண்டில் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டது. அந்தச் சிலையும் சுற்றுலாத் துறையின் control-க்கு போய்விட்டது. அது பொதுப் பணித் துறையிடம் இருந்தால், paint அடிப்பது போன்ற மற்ற வேலைகளும் நன்றாக இருந்திருக்கும். நான் ஏற்கெனவே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் இது சம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறேன். அந்தச் சிலையும் paint அடிக்காமல் பழுதடைந்து கொண்டிருக்கிறது. அதேபோல, சென்னையிலே திருவள்ளுவர் தினத்தை ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடுகின்றீர்கள். கன்னியாகுமரியில் இருக்கக்கூடிய திருவள்ளுவர் சிலைக்கும் அரசு விழா எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி கடலுக்குள் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் சிலைக்கும், பயணிகளை அழைத்துச் செல்வதற்காக ஏற்கெனவே M.L. குகன், M.L. பொதிகை மற்றும் M.L. விவேகானந்தர் என்ற மூன்று படகுகள் பயன்பாட்டில் இருந்து வந்தன. புதிதாக வாங்கப்பட்ட

[திரு. எ.வ. வேலு] [2022 மே 4

இரண்டு படகுகளில், M.L. தாமிரபரணி படகில் 75 பயணிகளும் மற்றொரு படகான M.L. திருவள்ளுவர் படகில் 150 பயணிகளும் பயணிக்கலாம் என்ற நிலையில்தான் வாங்கப்பட்டன. கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகள் ஆண்டுக்கு 20 இலட்சம் பேர் ஏற்கெனவே வருகை புரிந்தார்கள். மூன்று படகுகள்மூலம் தோராயமாக ஒரு நாளைக்கு, கொரோனா காலத்திற்கு முன்னால், 12 கோடி ரூபாய் வருமானம் இருந்தது. இப்போது 2021–2022 ஆம் ஆண்டு, வருமானம் 3.2 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது. பயணிகளுடைய வருகையும் 5.5 இலட்சம் என்ற அடிப்படையில் நான்கில் ஒரு பங்காக பயணிகளுடைய எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. கன்னியாகுமரியில் உள்ள பணியாளர்களில் நிரந்தரப் பணியாளர்கள் 19 பேர் இருக்கிறார்கள். ஏற்கெனவே தற்காலிகப் பணியாளர்கள் 64 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. தற்போதுள்ள படகு நிறுத்தும் தளம் 94 மீட்டராகத்தான் இருக்கிறது. பழைய படகுகளை நிறுத்துவதற்கு மட்டும்தான் போதுமான இடம் அங்கு இருக்கிறது. புதிய படகுகளின் நீளம் 27 மீட்டராக உள்ளது. ‘சாகர்மாலா’ திட்டத்தின் மூலமாக 18–10–2016 அன்று படகு நிறுத்தும் தளம் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. மார்ச் மாதத்தில் நானே நேரடியாகச் சென்றேன். அங்கே அந்த இரண்டு படகுகளையும் நிறுத்துவதற்கு இடம் போதுமா என்றால், போதாத நிலை இருக்கின்ற காரணத்தினால் நேரடியாகச் சென்று பார்த்து, ஒப்பந்ததாரரை அழைத்து, உடனே அந்தப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். உடனே, அந்தப் பணிகளைத் தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் தொடங்கிய பின்பு, அந்தப் படகுகளை அங்கே கொண்டு வந்து செயலாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இது ஒன்று.

இதற்கு முன்னால் இருந்த இரண்டு படகுகள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக வாங்கப்பட்டவை. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக வாங்கப்பட்ட படகு அல்ல. அவர்கள் வாங்கி எங்களிடத்திலே கொடுத்து நடத்துங்கள் என்று சொன்னார்கள். கொரோனா பெருந்தொற்று வந்த காரணத்தினால், சுற்றுலாப் பயணிகளும் குறைந்துவிட்ட காரணத்தினால், அந்த இரண்டு படகுகளையும் நிறுத்துவதற்கு இடமில்லாத காரணத்தினால் திரும்ப எங்களிடத்திலே கொடுத்துவிடுங்கள் என்றார்கள். ஏனென்றால், ஏற்கெனவே வங்கியின் மூலமாக கடன் பெற்று வாங்கியிருக்கிறார்கள். இந்த நிலையிலே இந்த இரண்டு

2022 மே 4] [திரு. எ.வ. வேலு]

படகுகளையும் எங்களிடம் திருப்பித் தாருங்கள் என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில்தான் அதற்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, சுற்றுலாத் துறையிடம் ஒப்படைப்பதற்காக முடிவு செய்திருக்கிறோம். அதுவும் தமிழக அரசிற்குக் கட்டுப்பட்டதுதான். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குக் கட்டுப்பட்ட துறைதான் அந்தத் துறையும். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. ஒன்று பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் நடத்தும் அல்லது சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும். ஆக, யார் நடத்துவதாக இருந்தாலும், அதை விரிவுபடுத்த வேண்டிய நிலை இருக்கிறது. அந்த ஒப்பந்ததாரரிடம் உடனே பணிகளை முடிக்கச் சொல்லியிருக்கிறேன். அவர் பணிகளை முடித்தவுடனேயே அந்தப் படகுகளைப் பயணிகள் பயன்படுத்த முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

முற்பகல் 11–30

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதெல்லாம் விவர அறிக்கையில் இல்லாவிட்டாலும், இப்போது தெளிவாகக் கூறியிருக்கிறீர்கள். ஒரே ஒரு கருத்து. அங்கே ஏற்கெனவே படகுகள் போக்குவரத்திற்காக dredging machine இருந்தது. கிட்டத்தட்ட 50 ஆண்டுக் காலமாக dredging machine இருந்தது. அங்குள்ள மணலைத் தோண்டிக் கொண்டிருந்தது. இப்போது அந்த machine உபயோகிக்க முடியாத நிலையில், பழுதடைந்து விட்டது. ஆகவே, 60 இலட்ச ரூபாயில் புதிதாக ஒரு machine-ஐ வாங்க வேண்டும். அதேபோன்று, நீங்கள் கூறியதுபோல், உள்ளுக்குள் 250 மீட்டர் நீளமுள்ள சாலை பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. அதனையும், நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். முக்கியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், பொங்கல் தினத்தன்று, இங்கே 'திருவள்ளுவர் தினம்' கொண்டாடுவதைப்போல், அங்கு உள்ள திருவள்ளுவர் சிலைக்கு அரசு சார்பாக, மாவட்ட நிருவாகம், அதே நாளில் அரசு மரியாதை செலுத்துமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2022 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அய்யன் திருவள்ளுவர் என்று சொன்னால், மறுபதிப்பு எங்களுடைய தலைவர் கலைஞர்தான் என்பது நாடறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திருவள்ளுவரை நாட்டுக்குப் பறைசாற்றக் காரணமாக இருந்தவர் அவர்தான்.

பொதுப் பணித் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோதுதான், ஒவ்வொரு பேருந்திலும் திருக்குறளை எழுத வேண்டுமென்று சொன்னவர் அவர்தான். ‘குறளோவியம்’ தீட்டியது அவர்தான். பல பேர் திருக்குறளுக்கு உரை எழுதினார்கள். திரு. பரிமேலழகர், திருக்குறள் முனுசாமி போன்றவர்கள் திருக்குறளுக்கு உரை எழுதினாலும்கூட, நாட்டு மக்களுக்குப் புரிகிற மாதிரி திருக்குறளுக்கு உரை எழுதியவர், எங்கள் தலைவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் வள்ளுவர் கோட்டம் கட்டியவர் எங்களுடைய தலைவர்தான். அதனால்தான் உலகமே போற்றுகிற அளவிற்கு, வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள், வந்து பார்க்கக்கூடிய அளவில், கன்னியாகுமரியில் 133 அடி திருவள்ளுவர் சிலையை அமைத்தவரும் எங்களுடைய தலைவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற, தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உறுப்பினர் சொன்ன கோரிக்கையினை திருவள்ளுவர் தினத்தன்று அங்கு ஒரு விழாவை நடத்த வேண்டுமென்ற உங்கள் கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மன்றத்திலே இருக்கிறார்; அவர் இதனை செவிமடுத்திருக்கிறார். அவர் இதற்கு ஒரு நல்ல தீர்வைக் காண்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளுவர் சிலையின் maintenance மிகக் குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நானும் அதைப் பார்த்தேன். என்னிடத்தில், நீங்கள் கடிதமும் கொடுத்துள்ளீர்கள். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்து இதுகுறித்துப் பேசியிருக்கிறேன். உடனேயே, அதனை maintenance-க்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதோடு மட்டுமல்ல; இன்னொன்று இப்போதிருக்கிற

2022 மே 4] [திரு. எ.வ. வேலு]

நவீன உத்திகளைப் பயன்படுத்தி, laser light*–களைப் பொருத்தி, திருவள்ளுவர் முகம் தெளிவாகத் தெரிகின்ற அளவில் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்திருக்கிறேன். அவர், தனியார் நிறுவனங்களையெல்லாம் அழைத்து,* quotation*–களையெல்லாம் வாங்கி கொண்டிருக்கிறார். திருவள்ளுவரை பொறுத்தளவில், கழக நண்பர்கள் மற்றும் இந்த ஆட்சியில் இருப்பவர்களைவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத்தான் அதிக அக்கறை இருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. எனவே, இன்னும் சிறப்பாக, அதற்கு முக்கியத்துவம் தருவோம். ஏற்கெனவே நீங்கள் கொடுத்த கடிதத்திற்குக் கட்டாயம் தீர்வு காணப்படும்.*

4. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 20 முதல் 22 வரையிலான மூன்று அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் அவர்கள், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஓர் ஆண்டிற்குள் நான்காவது அறிக்கையினைத் தாக்கல் செய்வதற்கு எங்களை ஊக்கப்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.